**செ.வெ.எண்: 223** **நாள் : 25.04.2022**

## திருநெல்வேலி மாவட்டம்

## காலநடை பராமரிப்புத் துறையில் காலியாக உள்ள கால்நடை பராமரிப்பு உதவியாளர் பணியிடங்களுக்கு திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் தேர்வு நடைபெறவுள்ளது தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் அவர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருக்கும் முகவரிக்கு சென்று நேர்காணலில் கலந்து கொள்ளலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. வே.விஷ்ணு,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

கால்நடை பராமரிப்புத் துறையில் காலியாக உள்ள கால்நடை பராமரிப்பு உதவியாளர் பதவிக்கு திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் தேர்வு **பாளையங்கோட்டை, TDTA பிஷப் சார்ஜெண்ட் மனவளர்ச்சி குறைந்தோர் சிறப்புபள்ளியில் 11.05.2022 முதல் 21.05.2022** வரை தினமும் காலை **9.30** மணிமுதல்மதியம் **1** மணிவரையும், **2.00** மணி முதல் மாலை **5.30** மணி வரையும் நடைபெறவுள்ளது.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு அவர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்த முகவரிக்கு நேர்காணலில் கலந்து கொள்வதற்கான நேர்முக அழைப்பாணை தனியே அஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது எனவும், அதனில் குறிப்பிட்டுள்ள நாளில், அழைப்பாணை கடிதத்துடன் அனைத்து அசல் சான்றுகளுடன் நேர்காணலில் கலந்து கொள்ள விண்ணப்பதாரர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் நேர்காணலுக்கானஅழைப்பாணை கிடைக்கப் பெறாதவர்கள் **10.05.2022**க்குள் தகுந்த ஆதாரங்களுடன் திருநெல்வேலி, கால்நடை பராமரிப்பத்துறை, மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். நேர்காணலுக்கான அழைப்பாணை இல்லாதவர்கள் நேர்முகத் தேர்வுவளாகத்தினுள் செல்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. வே.விஷ்ணு,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள் .

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.**